**வாசிக்க**: **எசேக்கியல்** 33:30-33

**வார்த்தையை கேட்பவர்களல்ல**; **அதன் படி செய்பவர்களே ஆசீர்வதிக்கபடுவர்**.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மேலும் மனுபுத்திரனே, உன் ஜனத்தின் புத்திரர் சுவர் ஓரங்களிலும் வீட்டுவாசல்களிலும் உன்னைக்குறித்துப் பேசி, கர்த்தரிடத்திலிருந்த புறப்பட்ட வார்த்தை என்னவென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும் சகோதரனோடே சகோதரனும் சொல்லி, ஜனங்கள் கூடிவருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள்போல் உட்கார்ந்து, உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள், ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை, அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள், அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. இதோ, நீ இனிய குரலும் கீதவாத்தியம் வாசிப்பதில் சாமர்த்தியமுமுடையவன் பாடும் இன்பமான பாட்டுக்குச் சமானமாயிருக்கிறாய், அவர்கள் உன் வார்த்தைகளைக் கேட்கிறார்கள், ஆனாலும் அவைகளின்படி செய்யாமற்போகிறார்கள். ஆதலால் தேவனுடைய நியாயதீர்ப்பின் எச்சரிக்கை சத்தம் காத்திருக்கிறது. இதோ, அது வருகிறது, அது வருகையில் தங்கள் நடுவிலே ஒரு தீர்க்கதரிசி இருந்தான் என்று அறிந்துகொள்வார்கள் என்றார்.

**கேள்வி**:

தேவனுடைய வார்த்தையை கேட்க தானே வாஞ்சையோடு ஜனங்கள் ஓடினார்கள். பின்னர் ஏன் அப்படியே வாழமுடியவில்லை..?

**பதில்**:

ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்தில் ஆண்டவராகிய கர்த்தர் ஜனங்களுக்கு ஒரு எச்சரிக்கை தந்தார். உங்கள் இருதயத்தை சரிசெய்து கொள்ளுங்கள். நீங்கள் உதடுகளினால் என்னை துதிக்கிறீர்கள். ஆனால் உங்கள் இருதயமோ எனக்கு தூர இருக்கிறது என்றார். அங்கேயே சரி செய்திருந்தால் அவர்கள் ஆசீர்வதிக்க பட்டிருப்பார்கள். ஆனால் இப்போது இன்னும் மோசமாகி உதடுகள் கர்த்தரை பாடுகிறது; செவிகள் அவர் வார்த்தையை கேட்கிறது. ஆனால் இருதயமோ கர்த்தரை விட்டு தூரமட்டுமல்ல. பொருளாசையினால் நிரம்பியிருக்கிறது. ஆகவே உதடுகளில் துதித்ததும், செவிகளில் கேட்டதும் வாழ்கையில் காணப்படாமல் இருதயம் கேடாகி நியாயதீர்ப்பின் நாளுக்கு ஆயத்தமாயிருக்கிறது. எனக்கு அருமையானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக்கொண்டு ஆராதிப்பவனே உண்மையான ஆசியை பெறமுடியும். ஆகவே உதடுகளோடும், செவிகளோடும் மட்டுமல்ல; நம் இருதயத்தில் இருந்து தேவனுக்கு ஆராதனை செலுத்தி அவரை தொழுது கொள்ளுவோம். நிச்சயமாக தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்தரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள். யாக்கோபு 1 :22

**ஜெபம்**

எங்களை நேசிக்கும் பரலோக தகப்பனே. எச்சரிக்கைகளை அசட்டை செய்யாத பிள்ளைகளாய். உங்களுக்கு பிரியமாய் வாழுவோம். ஆமென்